**தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**மாணாக்கர் சேர்க்கை – 2022**
**கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை – 600 006**
**இளநிலை பட்டப்படிப்பு (Under Graduate Courses) சேர்க்கை : 2022–2023**

தமிழகத்தில் உள்ள 163 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள இளநிலை பட்டப்படிப்பு முதலாமாண்டு மாணாக்கர் சேர்க்கைக்கான (2022–2023) விண்ணப்பங்களை **www.tngasa.in** and **www.tngasa.org** என்ற இணையதள முகவரிகளில் பதிவு செய்யலாம்.

இணையதள வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணாக்கர்கள் கல்லூரி உதவி மையங்கள் (Admission Facilitation Centre - AFC) மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களின் பட்டியல் மேற்குறித்த இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. அனைத்து AFC மையங்களிலும் போதிய அளவில் கொரோனா தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| ஒரு கல்லூரிக்கு விண்ணப்பக் கட்டண விவரம் | |
|---|---|
| விண்ணப்பக் கட்டணம் – ரூ.48/–<br>பதிவுக் கட்டணம் – ரூ.2/– | **SC/ST பிரிவினருக்கு விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை**<br>பதிவுக் கட்டணம் – ரூ.2/– மட்டும் |

**விண்ணப்பம் மற்றும் பதிவுக் கட்டணம் :** விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்தை விண்ணப்பதாரர்கள் Debit Card/Credit Card/Net Banking மூலம் இணையதள வாயிலாக செலுத்தலாம். இணையதள வாயிலாகக் கட்டணம் செலுத்த இயலாத மாணாக்கர்கள் கல்லூரி சேர்க்கை உதவி மையங்களில் "The Director, Directorate of Collegiate Education, Chennai – 6" என்ற பெயரில் 22/06/2022 அன்று அல்லது அதற்குப் பின்னர் பெற்ற வங்கி வரைவோலை அல்லது நேரடியாகவும் செலுத்தலாம்.

மாணாக்கர் சேர்க்கை வழிகாட்டி மற்றும் கால அட்டவணையை மாணாக்கர்கள் மேற்குறித்த இணையதளங்கள் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

| | |
|---|---|
| **இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்யத் துவங்கும் நாள்** | 22.06.2022 |
| **இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய இறுதி நாள்** | 07.07.2022 |

தொடர்பு எண் – 044 – 28260098/28271911

**கல்லூரிக் கல்வி இயக்குநர்**